# ஸ்ரீ வைஷ்ணவியின்

# வைபவக் கும்மி

*

1187/-

# அழகலைக் கண்ணிகள்



இயற்றியவர்

ஆண்டவன்பிச்சை

1971

விலை 25 காசுகள்

நவராத்திரி பதிப்பு 1970
இரண்டாம் பதிப்பு 1971

ஸ்ரீகாம் பிரிண்டர்ஸ்
ஸ்ரீநிவாச காந்தி நிலையம்
96, மோபரீஸ் சாலை
சென்னை—18

ஓம் ஸ்ரீ சித்தி விநாயகஸ்வாமிநே நம :
ஓம் ஸ்ரீ சத்குருப்யோ நம :
ஓம் ஸ்ரீ வைஷ்ணவி பரதேவதாயை நம :

வடமுல்லைவாயில்

# ஸ்ரீ வைஷ்ணவி தேவியின்
# வைபவக் கும்மி

---

காப்பு

வைஷ்ணவி தேவியின் வைபவம் கூறிட
வரசித்தி கணபதி தாட்பணிந்தேன்
இஷ்டமுடன் எந்தன் வாக்கினில் தோன்றியே
இயம்புவாய் அன்னை மகிமைகளை.

---

அண்டர்கள் போற்றிடும் அன்னை ஸ்ரீவைஷ்ணவி
அற்புதமெல்லாம் எடுத்துரைக்க
தண்டனிட்டுப் பெரியோர்கள் நல்லாசியை
நாடிப்பணிந் திட்டேன் நல்குவீரே. 1

திருமுல்லை வாயிலென்றோர்த் திருப்பதி
ஒரு பக்தருக்காக உண்டானதுவாம்
மருவில்லா மனத்தினர் நினைத்தபடி இங்கு
மாதாஸ்ரீ வைஷ்ணவி வந்தமர்ந்தாள். 2

அழகான ஆலயம் அற்புதமாய்க் கட்டி
பழமரங்கள் சூழ்ந்த வனத்தினிலே
நிழல் அளிக்கும் முல்லைக் கொடிசூழும் பந்தல்கீழ்
நித்யவாஸமாய் ப்ரதிஷ்டை செய்தார். 3

வள்ளிமலை சச்சிதானந்த ஸ்வாமிகள்
வகுத்துக் கொடுத்த வழிமுறையாய்
உள்ளிருந்து தேவிக்குற்ற வழிபாடு
உத்தமர்கள் இருவர்கள் செய்தார். 4

கண்கள் இரண்டும் ஓர்பொருளைக் காண்பதுபோல
கருத்தொருமித் தன்பாய் இருப்பவராம்
அண்ணல் ப்ரம்மண்யமும் பார்த்தசாரதியாரும்
அன்னைக்கு இருகண்கள் போன்றவராம். 5

ஆதிமுதல் ஒன்றாய்ச் சேர்ந்து வாழுமிவர்
ஆதாரமாய்க் கொண்டார் அன்னைப்பாதம்
வாதில்வல்லவரும் வைத்ய நிபுணரும்
வாழ்வைத் துறந்தன்னைக் கடியாரானார். 6

உள்ளிருக்கும் ஒளிஓங்கி வளர்ந் தெங்கும்
வெள்ளமாய்ப் பொங்கி எழுந்ததம்மா
துள்ளியோடி வந்தார் பக்தரெல்லாமிங்கு
துதித்துப் பூஜித்து மகிழ்வடைந்தார். 7

வளர்பிறை போல வளர்ந்த அருள் தன்னை
வாரிவழங்கினாள் அன்னையவள்
தளர்வடைந்தோ ரெல்லாம் தளிர்த்து செழித்திட
தவறாமல் அருள்மழை பொழிந்தாள் தேவி. 8

நால்திசையில் இருந்துவரும் பக்தர்
நாளுக்கு நாள்கள் வளர்ந்திடவும்
ஆல்போல் தழைத்த அருளுடையாளன்னை
ஆலயத்தைப் பெரிதாக்கிக் கொண்டாள். 9

ஆனை முகனையும் ஆறுமுகனையும்
அன்பாய் தன்பக்கத்தில் வைத்துக்கொண்டாள்
தானாக மீனாஷி தேவியும் வந்தங்கு
தங்கினாள் உற்சவ மூர்த்தியாக. 10

சங்க நிதியுடன் பத்ம நிதியும்
ஸ்படிக விநாயகர் ஷண்முகரும்
கங்கை சங்கம் ஸாளிக்ராமம் ஹனுமாரும்
காமாக்ஷிதேவியும் வந்தமர்ந்தார். 11

பகவான் ரமணரும் சச்சிதா நந்தரும்
அருணகிரிநாத ஸ்வாமிகளும்
அஹம் ப்ரம்ம நிலைபெற்ற சேஷாத்ரி ஸ்வாமி
அன்னையைச் சூழ்ந்து அமர்ந்துக்கொண்டார். 12

மஹேச்வரியுடன் நாராயணி ப்ராம்மி
மங்களமாகவே வந்தமர்ந்தார்
யோகேச்வரர் ஆஞ்சநேயரும் வந்திங்கு
யேகபோகமாய் விளங்குகின்றார். 13

கிழக்கு கோபுர வாசலருகினில்
கீர்த்தியாய் வ்யாச விநாயகரும்
வேழ முகத்துடன் வேண்டும் வரம்தர
வேகமாய் வந்தமர்ந்தார் எதிரில். 14

கங்கைஎன்னும் புண்யதீர்த்தம் தந்தாள் அன்னை
அங்கருகில் ரமண தீர்த்தம் தந்தாள்
தங்காமல் ஓடிடும் யமுனையை இங்குநம்
தாகம் தணித்திட கொண்டுவந்தாள். 15

தக்ஷிணா மூர்த்திக்கும் சன்னதி கட்டியே
தவறாமல் வழிபாடு செய்யவைத்தாள்
பக்ஷமுடன் குருவாரத்தில் தேவியும்
பரம குருவாய் விளங்கிடுவாள். 16

குருஜெயந்தி எல்லாம் கோலா கலமாக
கொண்டாடி ஏழைக்கு அன்னமிட்டு
திருப்புகழ் பஜனையும் திவ்யநாம பஜனையும்
திக்கெட்டும் கேட்க முழங்கவைத்தாள். 17

அன்னசாலையை அமைத்துக் கொண்டாள் அங்கு
அனைவர்க்கும் போஜனமளித்து வந்தாள்
சின்னசின்ன குடில்கட்டிக் கொண்டா ளன்னை
சிந்தை தெளிந்தவர் வந்திருக்க. 18

பாகசாலையைப் பெரிதாகக் கட்டியே
பக்கத்தில் கோசாலை தானமைத்தாள்
வேகமாய் பஜனைஹால் சித்திர மண்டபம்
புத்தகசாலையும் வைக்கச் செய்தாள். 19

அன்றாடம் பூஜைகள் அழகாய் நடக்கவே
அன்னை அருளால் வகுத்தாள்
மன்றாடி வேண்டும் பக்தர்க்கருள் செய்ய
மாதாபல லீலைசெய்து வந்தாள். 20

அந்தந்த வேளையில் வந்தன்பர் செய்திடும்
அர்ச்சனைகள் ஏற்று அருள்புரிவாள்
எந்தெந்த வரங்களும் ஏன்என்று கேளாமல்
இஷ்டமுடன் தந்து வாழ்ந்திடுவாள். 21

வெள்ளிக் கிழமை விசேஷ பூஜைகளும்
வியாழன்தோறும் குருபூஜை யுண்டாம்
கொள்ளை அழகுடன் பௌர்ணமியில் தேவி
சந்தணக் காப்பில் ஜொலித்திடுவாள். 21

ஆடி பூரத்தில் தைலாபி ஷேகமாடி
ஆண்டாள் அலங்காரம் செய்துக்கொள்வாள்
கூடி இருப்பவர் கண்டு களித்திட
கோதையாய்க் காக்ஷி கொடுத்திடுவாள். 23

பூரத்தின் மகிமையைப் புகன்றிடப் போகுமோ
பூமித்தாய் கோதையாய் பிறந்தநன்னாள்
ஆரங்கள் சூட்டியே அரங்கனை மணந்தவள்
ஆண்டாளாய் வைஷ்ணவி தோன்றிடுவாள். 24

ஆண்டில் ஐந்து தைலாபிஷேக முண்டாம்
ஆடிபூரம் நவராத்ரியிலும்
வேண்டி நரகாசுரன் கேட்ட வரத்தினால்
கொண்டாடும் தீபாவளி தன்னிலாம். 25

புவனங்க ளெல்லாம் போற்றும் அன்னைக்கிங்கு
போகி பண்டிகையில் அபிஷேகமாம்
நவமாய்ப் பிறந்திடும் சித்திரைப் புத்தாண்டில்
தேவிக்கோர் தைலாபிஷேகஞ் செய்வார். 26

அந்தந்த அவதாரம் செய்தத் திருநாளில்
அன்னை அவ்வடிவத்தில் தோன்றிடுவாள்
சொந்தமாய் எல்லா தெய்வ வடிவமும்
வந்து அன்னையிடம் வெளிப்படுவார். 27

வைகுண்ட ஏகாதசி தன்னில் வைஷ்ணவி
வகையாக அலங்காரம் செய்துக்கொள்வாள்
வாசமாய் ஏழுமலைதன்னில் வாழ்ந்திடும்
ஸ்ரீநிவாசர் அவதாரம் கொள்வாள். 28

சிவராத்ரியில் தேவி சிவனாகவே மாறி
தவமாத வர்க்கருள் செய்திடுவாள்
நவமியில் ஸ்ரீராமராக காக்ஷி தந்து
நம்முன் வில்லேந்தியே நின்றிடுவாள். 29

அஷ்டமியில் அன்னை க்ருஷ்ணனைப் போலவே
அலங்காரம் செய்துக்கொண் டானந்திப்பாள்
கஷ்டமில்லாமலே கண்ணனைக் கண்டு நாம்
களித்து கோபியர்போல் மாறிடலாம். 30

நவராத்ரி வைபவம் நாடெங்கும் கொண்டாடும்
நம்மன்னை வைஷ்ணவி தேவிக்கிங்கு
தவயோகி யாம்பார்த்த ஸாரதியார் செய்யும்
பாங்கினைப் போலெங்கும் கண்டதில்லை. 31

நாடெங்கிலும் உள்ள பக்தர்களுக் கெல்லாம்
நவராத்ரி அழைப்பிதழ் அனுப்பிடுவார்
நாடிவரும் பக்தர் தங்கி தரிசிக்க
நலங்கள் பலவிதம் செய்திடுவார். 32

ஆலய மெங்கிலும் அலங்கார தோரணம்
ஆங்காங்கு பாங்காய் அமைத்திடுவார்
கோல விளக்குகள் வண்ணம் வண்ணமாக
கோயிலைச் சுற்றி அமைத்திடுவார். 33

அன்ன தானத்துடன் தண்ணீர்ப் பந்தல்களும்
அறுசுவை சிற்றுண்டிச் சாலைகளும்
இன்ன முதாம்பல நைவேத்தி யங்களும்
ஏழைக் கிலவசமா யளிப்பார். 34

ஆவலுடன் வந்து அன்னைப் பணிசெய்ய
அன்பர்கள் வந்து நிறைந்திடுவார்
காவல் படையினர் கருத்துடன் வந்திங்கு
காலையும் மாலையும் காத்திருப்பார். 35

ஆரம்ப மாகும் தினம் அதிகாலையில்
ஆனைமுகற் கபிஷேகம் செய்வார்
ஆலயமெங்கிலும் சுற்றி வந்து காப்பு கட்டி
கணபதி ஹோமம் செய்வார். 36

தேவிக்கு அபிஷேக அலங்காரங்கள் செய்து
தேகம் புளகித மாகிடவே
சேவித்து ஹாரத்தி கண்டு கனிவுடன்
சேவார்த்திகள் மகிழ்வெய் திடுவார். 37

பஜனை மண்டபத்தில் பாங்குடன் வைஷ்ணவி
பரமானந்தமாய்க் கொலு விருப்பாள்
பக்கத்தில் ஸ்ரீசக்ர யந்த்ரத்தில் பக்தர்கள்
பணிவுடன் லக்ஷார்ச்சனைகள் செய்வார். 38

காலையில் செய்யும் லக்ஷார்ச் சனைக்காக
கணக்கற்ற ஆண்பெண்கள் கலந்துக்கெள்வார்
கருத்துடன் உச்சிக் காலபூஜை நைவேத்யம்
கற்பூர ஹாரத்தி செய்திடுவார். 39

நாளும் சுமங்கலி கன்னிப் பெண்களுக்கும்
நல்லாடைகள் தந்து உபசரிப்பார்
ஆளும் பொங்கியம்மை அகங்குளிர்ந்திடவே
ஆடை குறத்திக்கு அளித்திடுவார். 40

பார்க்கவரும் பக்தர் பசியுடன் செல்லாமல்
பக்ஷமாய் அன்ன யளித்திடுவார்
யார்க்கும் வருத்தம் உண்டாகாம லவர்க்
கான உதவிகள் செய்திடுவார். 41

உத்சவ வைபவம் உரைத்திட லாகுமோ
உணர்ந்ததை உள்ளபடி உரைப்பேன்
கச்சித மாகவே காலையும் மாலையும்
கணக்கற்ற பக்தர்கள் கூடிடுவார். 42

மாலையில் மஹாபிஷேக மொடு தினம்
மனங் கவரும் அலங்காரம் செய்வார்
சேலையும் மாலையும் சிறந்த அணிபணி
சிறப்புடன் தேவிக்கு சிங்காரிப்பார். 43

முகத்தில் சந்தணக்காப்பு மினுமினுக்க தேவி
முறுவலித் தன்பாய் அழைத்திடுவாள்
அகமும் புறமும் ஆனந்த மாகவே
அன்னையைக் கண்டுநாம் போற்றிடலாம். 44

கருட வாஹனத்தில் களிப்புடன் அமர்ந்தன்னை
கம்பீரமாய்க் காக்ஷி தந்திடுவாள்
வருடத்தில் நவராத்ரி உற்சவ காலத்தில்
வைபவமாய்ச் சுற்றி வந்திடுவாள். 45

நாதஸ்வர இசை பாட்டும் பஜனையும்
நாலுபுறம் சூழ்ந்து ஒலித்திடவே
ஆதவனைப்போல சுடர்வீசும் வாணங்கள்
அற்புதமாகக் கொளித்திடுவார். 46

நாளுமோர் அலங்காரம் செய்திடுவார் (அன்பர்)
நாடெங்கிலும் உள்ளோர் பார்த்திடவே
வாளும் பல்லாயுதம் ஏந்தியே வைஷ்ணவி
காளியாய் காக்ஷியும் தந்திடுவாள். 47

லக்ஷ்மி ஸரஸ்வதி ராஜராஜேச்வரி
லாவண்யமாய் வள்ளி ரூபமுடன்
அக்ஷயமாகவே அன்னம் அளித்திட
அன்னை அன்னபூரணி ஆயிடுவாள். 48

ஆயகலைகள் அனைத்திற்கும் ஆதியாம்
காயத்ரி யாகவும் தோன்றிடுவாள்
மாயத்தை நீக்கியே மனதைத் தெளிவிக்க
மாதா யோகேச்வரியா யிருப்பாள். 49

எத்தனை வேடிக்கை எத்தனை வைபவம்
எத்தனை ஆயிரம் பக்தர்களாம்
அத்தனை பேர்களும் அமைதியுடன் வந்து
ஆனந்தமாய்க் கண்டு போற்றிடுவார். 50

வைஷ்ணவி தேவியின் வைபவங்கள் சொல்ல
வாக்குக்கும் மனதிற்கும் சக்தியுண்டோ
நிஷ்காம்ய மாகவே தேவியை பூஜிக்கும்
நிர்மல சித்தர்கள் அறிந்துக்கொள்வார். 51

அல்லும் பகலும் அன்னை நினைவினால்
அகமுருகி போற்றும் இருபெரியார்
சொல்லுக் கடங்கா தேவியின் சேவையில்
ஸோஹம் பாவத்தில் ஸுகித்திருக்கார். 52

பக்தியில் பண்பட்ட மனத்துடையார் பார்த்த
சாரதி என்னும் பெயருடையார்
சக்திஸ்ரீ வைஷ்ணவி தண்ணருளால் இங்கு
பல்லாயிரம் ஆண்டு வாழ்ந்திடுக. 53

சன்னதியே கதி என்று இருப்பவர்
சாது ப்ரம்மண்யத் தவப்பெரியார்
அன்னையின் சேவையில் ஆனந்தமாகப் பல்
லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திடுக. 54

அன்னைக் கரும்பணி செய்திடுவோ ரெல்லாம்
ஆனந்த மாகவே வாழ்ந்திருப்பார்
பின்னையோர் ஜென்மமும் பெற்றிடார்கள (அவர்)
பேரின்பமாய் வீடும் பெற்றிடுவார். 55

வாழிவாழி தேவி பூஜைமலர் பாதம்
வாழி வாழி தேவி பக்தரெல்லாம்
வாழிஅருள் தந்தை குருவான பெரியோர்கள்
வாழி பல்லாண்டன்னை திருவருளால். 56

வாருங்கள் எல்லோரும் வைஷ்ணவி கோயிலில்
சேருங்கள் அன்புடன் பக்தர்களே
கூறுங்கள் அன்னைத் திருநாமங்களை
கூடி நாம் கும்மி அடித்திடுவோம்
புகழ்பாடி நாம் கும்மி அடித்திடுவோம். 57

குத்துவிளக்கை நடுவில் வைத்து கைகள்
கொட்டியே கும்மி அடித்திடுவோம்
பக்தர்க்கருள் செய்யும் வைஷ்ணவி பாதத்தைப்
பாடிக் கும்மி அடித்திடுவோம் ஒன்ருய்ப்
பணிந்து கும்மி அடித்திடுவோம். 58

மாதரெல்லாம் கூடி மாதா வைஷ்ணவிக்கு
மங்கள ஹாரத்தி செய்திடுவோம்
பாதத்தில் கற்பூரம் காட்டி நம்மன்னைக்கு
த்ருஷ்டி பொட்டுமிட்டு போற்றிடுவோம். 59

மங்களமே ஜெய மங்களமே சுபமங்களமே
எங்கும் பொங்கிடவே
மங்களமே நித்ய மங்களமே என்றும்
மாதா பராசக்தி வைஷ்ணவிக்கு. 60

ஓம்

## அன்னை ஸ்ரீ வைஷ்ணவியின்

# அழகலைக் கண்ணிகள்

★

அன்னை ஸ்ரீ வைஷ்ணவியின்
அழகலைகள் வீசுதம்மா
அன்புடனே வாருமம்மா—நாம்
அலைந்து விளையாடிடலாம் அலையில். 1

துள்ளி எழும்பிவரும் அன்பாம்
அழகலைகள்—நம்மை
தொட்டு அணைக்குதம்மா மனத்
துன்பமெல்லாம் துடைக்குதம்மா 2

கண்களில் குதித்துவரும் கருணை
ப்ரவாஹ அலை
உண்ணேக்கி பாயுதம்மா அருள்
அலையால் உள்ளம் குளிருதம்மா 3

பாதாதி கேசாந்தம் பொங்கிவரும்
அழகலைகள்
பரவசமாக்குதம்மா மனமும்
பாகாய் உருகுதம்மா (பார்த்து) 4

இடையழகும் துடையழகும்
எழில் மிகுந்த பின்னழகும்
புடைத் தெழுந்த முகையழகும்
எழிலலைகள் எழுந்து பொங்கி வருகுதம்மா. 5

பன்மாலை பூண்டசங்கு கழுத்
தழகும் தோளழகும்
பாமாலை ஏற்கவென்று பக்ஷமுடன்
பாய்ந்தலைபோல் வருகுதம்மா. 6

கருத்தவில் புருவங்களும் கண்ணாடிபோல்
கன்னங்களும் திருநுதலில் சிந்தூரமும்
அருளலையைக் காட்டி இன்பம் ஊட்டுதம்மா
நம் அகஇருளை ஓட்டுதம்மா. 7

சுருண்ட கருங்குழல் தவழ்ந்து
விளையாடும் திருமுடியில்
இருக்கும் இளம் பிறையழகும் எழுந்துவந்து
இன்பஅலை வீசுதம்மா இதயத்தில். 8

அழகுமிகும் திருச்செவியில்
அணிந்திருக்கும் குண்டலங்கள்
ஆடி அலை போலசைந்து அன்பருக்கு
ஆனந்தம் அளிக்குதம்மா. 9

எள்ளின் பூபோன்ற சிறுநாசியில் இலங்கும்
வைரப் பொட்டும் முத்தும் பளபளத்து
சுடரலைகள் பாய்ந்து வருகுதம்மா
மனமும் பரவசமாகுதம்மா 10

சிறந்தசிறு அதரங்கள் சிறியமுக வாயழகும்
அரும்பு பற்கள் காட்டும் அருள்
புன்னகையாம் அழகலைகள் வீசுதம்மா அகம்புறமும்
ஆனந்தம் நிறையுதம்மா. 11

அபயவர கரங்கள் அருளலைப்போல்
புறண்டு வந்து
அடியாரைக் காக்குதம்மா மன
அகந்தை எல்லாம் நீக்குதம்மா. 12

எளியாரைக் கண்டவுடன் இரக்கமெனும் பேரலைகள்
எழுந்தோடி வருகுதம்மா
ஏழைகளின் ஏக்கமெல்லாம் போக்குதம்மா
இதய தாபமெல்லாம் நீக்குதம்மா. 13

பொங்கும் அருள் விழிக்கடலில்
தங்கிவரும் அன்பலைகள்
எங்கும் ஓடிப் பெருகுதம்மா
பக்தர்களை நாடியாடி வருகுதம்மா. 14

அழகுக்கெல்லாம் அழகூட்டும் அன்னை வைஷ்ணவி
அழகை உழக்கால் கடல் அளப்பதுபோல்
உரைத்தேன் உள்ளெழுந்த ஆசையினுல்
பிச்சையின் உள்ளெழுந்த ஆசையினுல். 15

அன்னை வைஷ்ணவி யழகை ஆருரைக்கலாகுமம்மா
அனைவர்களும் வாரும்மம்மா
அன்னையின் அருளலையில் மூழ்கிடலாம்
நாம் ஆனந்த மெய்திடலாம். 16

ஸ்ரீ வைஷ்ணவி சரணம்